பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 10 2023 7 15

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – சவுதி அரேபியா இடையே மின்சார கட்டமைப்பு, தூய்மை எரிசக்தி திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

2. புதுதில்லி வந்துள்ள தான்சானியா அதிபர் திரு. **Samia Zuluhu Hasan** இன்று குடியரசுத்தலைவர்த திருமதி திரௌபதி முர்முவை சந்தித்துப் பேச உள்ளார்.

3. இஸ்ரேலில் தாக்குதலில் ஹமாஸ் அமைப்புடன் லெபனானின் **Hezbollah** குழுவும் இணைந்துள்ளதால், அந்நாட்டு அரசு போர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

5. உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

இனி விரிவான செய்திகள் -

<<<<>>>>

இந்தியா – சவுதி அரேபியா இடையே மின்சார கட்டமைப்பு, பசுமை ஹைட்ரஜன் மற்றும் தூய்மை எரிசக்தி திட்டங்கள் தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

மத்திய எரிசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கான அமைச்சர் திரு. ஆர்.கே. சிங் மற்றும் சவுதி அரேபியாவின் எரிசக்தி துறை அமைச்சகருக்கும் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இருநாடுகளும் மின்சக்தியை அவசியமான காலகட்டங்களில் பகிர்ந்துகொள்வதற்கும், தூய்மை எரிசக்தி திட்டங்களை இணைந்து மேற்கொள்வதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

முன்னதாக அமைச்சர் திரு. ஆர்.கே. சிங் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் சவுதி அரேபியா குழுவினருடன் மத்திய கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்காவுக்கான பருவநிலை வாரத்தை கடைபிடிப்பது தொடர்பாகவும் ஆலோசனை நடத்தினர்.

<<<<>>>>

புதுதில்லி வந்துள்ள தான்சானியா அதிபர் திரு. **Samia Zuluhu Hasan** நேற்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

ஜி20 நாடுகள் கூட்டமைப்பில் ஆப்பிரிக்க யூனியனை இணைக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி எடுத்த நடவடிக்கைக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இன்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை குடியரசுத்தலைவர் மாளிகையில் அவர் சந்தித்துப் பேச உள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பின் தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அமெரிக்கா, அந்நாட்டுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிக்கும் என்று அதிபர் திரு. ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதற்கு நன்றி தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் திரு. நெதன்யாஹு, நாட்டின் பாதுகாப்பிற்காக இஸ்ரேல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முழு உரிமையும் உண்டு என்று அமெரிக்க அதிபர் கூறியுள்ளதை வரவேற்றுள்ளார்.

நிலைமையை சமாளிக்க தொடர்ந்து ஆதரவு தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே திரு. நெதன்யாஹு, உலக நாடுகளின் தலைவர்களிடம் இஸ்ரேல் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜெர்மன் பிரதமர் திரு. **Olaf Seholz**, யுக்ரைன் அதிபர் வொலாடிமிர் ஜெலன்ஸ்கி, இத்தாலிய பிரதமர் திரு. ஜார்ஜியா மெலோனி, பிரிட்டன் பிரதமர் திரு. ரிஷி சுனக் உள்ளிட்ட தலைவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆதரவு அவர் கோரி உள்ளார்.

ஐ.நா-வின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளர் திரு. **Tor Wennsland,** அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், கத்தார், எகிப்து, லெபனான் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் இஸ்ரேல் நிலைமை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

விரைவில் அங்கு அமைதி திரும்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது குறித்தும் அவர் பேச்சு நடத்தினார்.

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழுவுடன் இணைந்து லெபனானின் **Hezbollah** குழுவும் இஸ்ரேலில் நேற்றுமுதல் தாக்குதல் நடத்த தொடங்கி உள்ளதால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

இருதரப்பிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் குழுக்கள் ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

லெபனான் **Hezbollah** குழுவினர் எல்லைப் பகுதியில் இருந்து பீரங்கிகள் உள்ளிட்ட தளவாடங்களுடன் தாக்குதல் நடத்தி வருகின்றன.

கடந்த சனிக்கிழமையில் இருந்து இஸ்ரேல் தரப்பில் 600க்கும் மேற்பட்டோர் இந்த சண்டையில் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

தீவிரவாத குழுக்களுக்கும், ராணுவத்திற்கும் இடையேயான தாக்குதல்கள் அதிகரித்து வருவதை அடுத்து நேற்று இஸ்ரேல் அமைச்சரவையின் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாஹூ, அந்நாட்டு அரசியல் சட்டத்தின் 40வது பிரிவின்கீழ் தீவிரவாத குழுக்களுக்கு எதிரான போர் அறிவிப்பை வெளியிட்டார்.

தாக்குதலை சமாளிக்க அனைத்து படைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுமாறு ராணுவத்தினரை அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இத்தாலி, பிரான்ஸ் நாடுகளுக்கு இன்று நான்குநாள் பயணத்தை தொடங்குகிறார்.

இத்தாலி செல்லும் திரு. ராஜ்நாத் சிங், ரோம் நகரில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. Guido Crosetto-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளார்.

இத்தாலி பிரதமர் கடந்த மார்ச் மாதம் இந்தியா வந்திருந்தபோது, நடத்தப்பட்ட இருதரப்பு பேச்சுகள் குறித்தும் பாதுகாப்பு அமைச்சர்கள் விவாதிக்க உள்ளனர்.

இத்தாலிய பயணத்தை முடித்துக்கொண்டு பிரான்ஸ் செல்லும் திரு. ராஜ்நாத் சிங், பாரீசில் அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Sebastian Lecornu** உடன் 5வது ஆண்டு பாதுகாப்பு தொடர்பான பேச்சுகளை நடத்த உள்ளார்.

இந்தியா – பிரான்ஸ் இடையிலான நட்புறவு 25 ஆண்டுகளாக தொடர்ந்து வரும் நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் வர்த்தக தொழில் ஒத்துழைப்பு ஆகியவற்றில் இருநாடுகளும் இணைந்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகளின் பாதுகாப்பு தொழில் துறையினரையும் சந்திக்கும் திரு. ராஜ்நாத் சிங், இந்தியாவில் பாதுகாப்பு தொழில் துறையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும், ஒத்துழைப்பு குறித்தும் பேச்சு நடத்த உள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேல் தலைநகர் **Tel Aviv** மற்றும் இந்தியா இடையேயான விமான சேவை இம்மாதம் 14ஆம் தேதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது

இதுதொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பயணிகள் மற்றும் விமானிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆஃப்கனில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இரண்டாயிரத்து 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

கட்டிட இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

சாலைப்போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு பல பகுதிகளில் நிலநடுக்கத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் ஒருங்கிணைப்பாளர், 465 வீடுகள் முற்றிலும் தரைமட்டமாகிவிட்டதாகவும், 135 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய சிகிச்சை கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

காயமடைந்தவர்களை விரைந்து மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லவும், வீடுகளை இழந்தவர்களுக்கு தங்குமிடம், உணவு, தண்ணீர் போன்ற வசதிகளை செய்துகொடுக்கவும் உள்ளூர் மக்கள் முன்வர வேண்டும் என்று அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

மாணவர்கள் தங்கள் திறமையை வளர்த்துக்கொள்வதோடு, நாட்டின் எதிர்காலத்திற்காகவும் உழைக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் இந்திய தொழில்நுட்ப கல்விக் கழகத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் கலந்தாய்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாணவ – மாணவியர் தாங்கள் செய்ய உள்ள பணிக்கும், வாழ்க்கைக்கும் இடையே சமநிலையை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார்.

மன அழுத்தத்திற்கு ஒருபோதும் இடம் தரக்கூடாது என்றும், அதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி நிலவுவது அவர்களின் வளர்ச்சிக்கு உதவிடும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

நடப்பாண்டு மத்திய பட்ஜெட்டில் மன வளத்தைப் பாதுகாக்க மத்திய அரசு ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதாகவும், இதனை கல்வி நிறுவனங்களும் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் மனநலம் பாதித்தவர்களுக்கும் சிகிச்சை அளிக்க தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

நடப்பு நிதியாண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் இந்தக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற உள்ள அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இந்தக் கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலியாவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

நேற்று சென்னையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலியா, 49 புள்ளி 3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 199 ரன் எடுத்தது.

ரவீந்திர ஜடேஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

200 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 41 புள்ளி 2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

விராட் கோலியும், கே.எல். ராகுலும் இணைந்து 165 ரன் எடுத்தது இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தது.

விராட் கோலி 85 ரன் எடுத்தார். கே.எல். ராகுல் 97 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்று நடைபெற உள்ள போட்டியில் நெதர்லாந்து அணி – நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

2026ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஜப்பானின் நகோயா நகரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஹாங்சு நகரில் நடைபெற்ற 19வது ஆசிய விளையாட்டுப் போட்டியின் நிறைவு விழாவில் இதற்கான முறையான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**<<<<The End>>>>**